**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**
**MCOP No. 1435/2022**

**19.11.2025 ம .சா.1 சுபா க. பெ. முருகன்**
**சத்திய பிரமாணத்தின் பேரில் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்த என் கணவருக்கு இழப்பீடு கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் கணவர் இறந்தபோது அவருக்கு 40 வயது. எனது புகாரில் என் கணவரின் வயது 37 என்றும், மனுவில் 40 என்றும், பிரேத பரிசோதனையின்போது வேறு வயதும் அதிகப்படியான இழப்பீடு பெறுவதற்காக வயதை மாற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 4ம் மனுதாரர் நவநீதம் என் மாமியார். அவர் என்னுடன் உள்ளாரா என்றால் என் நாத்தனாருடன் இருக்கிறார். கடந்த 20.08.2022 அன்று மாலை 07.30 மணிக்குமேல் திருக்கோவிலூர் சாலையில் தெற்கு ஓட்டல் அருகே இந்த விபத்து நடந்தது. ஓட்டல் பக்கத்தில் வீடுகள், கடைகள் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. என் கணவர் காயலாங்கடையில் லோடு எடுக்கும் வேலை செய்துவந்தார். என் கணவர் எல்லா நாளும் வேலைக்கு செல்வார். மனுவில் என் கணவர் காயலாங்கடை வைத்திருந்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். என் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்தின்போது என் கணவர் தலைக்கவசம் வைத்திருந்தாரா என்றால் எனக்கு தெரியாது. என் கணவர் ஓட்டிச்சென்ற வாகனம் பதிவு செய்யப்படாத வாகனம் என்று சொன்னால் சரியல்ல. காயலாங்கடைக்கு வந்த உதிரிபாகங்களை வைத்து நாங்களே வாகனத்தை தயாரித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. அதனால்தான்அதற்கு பதிவு எண் எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

வாகனத்தை நாங்களே தயாரித்துக்கொண்டதால் அந்த வாகனத்தில் பதிவு எண் இல்லை என்றால் சரியல்ல. அந்த வாகனத்தில் பிரேக், இன்டிகேட்டர் லைட் ஆகியவை இல்லாததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் கணவருக்கு இரவு நேரத்தில் கண் பார்வை குறைவு என்றால் நன்றாக தெரியும். என் கணவரின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது என்றும், எதிர்மனுதாரரால் என் கணவருக்கு எந்த விபத்தும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் இயற்கை உபாதையின் காரணமாக வாகனத்தை நிறுத்திவிட்டு சென்றிருந்தபோது என் கணவர் இருசக்கர வாகனத்தை அந்த வாகனத்தின் மீது மோதிவிட்டு எதிர்மனுதாரர் மீது புகார் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

விபத்தில் எதிர்மனுதாரர் சம்மந்தப்படாததால் அவருக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அவருக்கும் காயம் ஏற்பட்டது. விபத்து நடந்த இடத்திற்கும் கிழக்கு காவல் நிலையத்திற்கும் சுமார் 6 கி.மீ இருக்கும். விபத்து பற்றி தெரியவந்தவுடன் நான் புகார் கொடுத்தேன். விபத்தில் சம்மந்தப்பட்ட வண்டி எது என்று தெரியாததால்தான் புகார் கொடுப்பதில் காலத்தாமதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு என் கணவரின் அஜாக்கிரதையால்தான் என்றும், நான் அதிக இழப்பீடு பெறுவதற்காக எதிர்மனுதாரர் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் எந்தவகையிலும் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**

Additional District Judge,
Tiruvannamalai.